**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன்– 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3 ஆம் நாளினை அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினமாக அனுசரித்தது– கூடுதல் செலவினம் ரூ.4,81,093/– ஒதுக்கீடு– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1D) எண்.29 — நாள்:01–10–2015
மன்மத, புரட்டாசி 14,
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்க:-

1. அரசாணை(டி) எண்.15, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 30–11–2012.
2. அரசாணை(நிலை) எண்.85, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 23–09–2013
3. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், ந.க.எண்.6333/இவாதததி–1/2013, நாள் 21.11.13.

------

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினத்தன்று வழங்கப்பட்டு வரும் 13 மாநில விருதுகளுடன், 2013 ஆம் ஆண்டு முதல் மனவளர்ச்சி குன்றியோருக்கான ஆரம்பநிலை பயிற்சி மையத்தில் பணிபுரியும் ஆசிரியருக்கு ஒரு விருது மற்றும் செவித்திறன் குறையுடையோருக்கான ஆரம்பநிலை பயிற்சி மையத்தில் பணிபுரியும் ஆசிரியருக்கு ஒரு விருது என இரு விருதுகள் கூடுதலாக வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, 2013 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3 ஆம் நாளினை, அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினமாக அனுசரித்து, விளையாட்டு போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தவும், வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுப் பொருட்கள் மற்றும் கோப்பைகள் வழங்கவும், ரூ.10.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் படிக்கப்பட்ட மூன்றில் காணும் கடிதத்தில் 2012 ஆம் ஆண்டு 13 விருதுக்காக 10 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கங்கள் 22 காரட்டில் செய்திட, பூம்புகார் கைவினைக் கழகம் ரூ.5,20,000/–க்கான விலைப்பட்டியல் வழங்கியுள்ளது என்றும், 13 தங்கப் பதக்கங்கள் பெறப்பட்டு, ரூ.5.00 இலட்சம் மட்டும் பூம்புகார் கைவினைக் கழகத்திற்கு வழங்கப்பட்டது என்றும், மேலும் அக்கழகத்திற்கு

ரூ.20,000/— வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், 2013 ஆம் ஆண்டு 14 தங்க பதக்கங்களுக்கு விலைவாசி உயர்வால் கூடுதலாக ரூ.66,250/— (2012 ஆம் ஆண்டுக்கான நிலுவைத் தொகை ரூ.20,000/—ம் தவிர்த்து) ரூ.66,250/— கூடுதல் நிதி மொத்தம் ரூ.86,250/— ஒப்பளிப்பு வழங்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தெரிவித்துள்ளார். தற்போது அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினத்தினை 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3 ஆம் நாளினை அனுசரித்தது தொடர்பாக கூடுதல் செலவினம் ரூ.4,81,610/—ஐ பின்வருமாறு நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்:-

| வ.எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | 2013 மாற்றுத் திறனாளிகள் தின கூடுதல் செலவினம் | ரூ.4,02,250/— |
| 2. | 2013 ஆம் ஆண்டு ரங்கா எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை | ரூ.29,000/— |
| | St. Louis நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை | ரூ.15,360/— |
| | ஆவின் நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை | ரூ.15,000/— |
| 3. | 2012 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் தினம்— தங்கப்பதக்கம் வாங்கிய வகையில் பூம்புகார் நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை | ரூ.20,000/— |
| | மொத்தம் | ரூ.4,81,610/— |

4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் டிசம்பர் திங்கள் 3—ம் நாளன்று அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினம் அனுசரித்தது தொடர்பாக ஏற்பட்ட கூடுதல் செலவினமான (தனியார் ஓட்டல்களில் பெறப்பட்டுள்ள ரூ.517/—க்கான பட்டியல் தவிர்த்து) ரூ.4,81,093/— (ரூபாய் நான்கு இலட்சத்து எண்பத்தோராயிரத்து தொண்ணூற்று மூன்று மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்தும் இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4—ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> ‘‘2235— சமூகப் பாதுகாப்பும் நலனும்—02—சமூக நலன்—101— மாற்றுத் திறனாளிகள் நலன்— பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் —II— மாநிலத் திட்டம் LV விளையாட்டுகள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் பங்கேற்பதற்காக மாற்றுத் திறனாளிகளுக்கு மானியம் வழங்குதல்—09—உதவித் தொகை03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை’’
> (த.தொ.கு. 2235—02—101—LV—0933)

6. மேலே பத்தி 4—ல் ஒப்பளிக்கப்பட்ட கூடுதல் செலவினம் ரூ.4,81,093/—(ரூபாய் நான்கு இலட்சத்து எண்பத்தோராயிரத்து தொண்ணூற்று மூன்று மட்டும்) 2015—16—ம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு/ இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். 2015—16 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு/ இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் நிதியொதுக்கீடு செய்யப்படுவதை

எதிர்நோக்கி, இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகின்றது. இச்செலவினத்தை 2015–16–ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கான கருத்துருவை சேர்ப்பதற்கான உரிய செயற்குறிப்புகளை தவறாமல் நிதித் துறைக்கு நேரடியாக உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.எண்.52892/நிதி(சந)/2015, நாள் 28.09.15–ன் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1020 (ஆயிரத்து இருபது)

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–5/35.
மாநில கணக்காயர், சென்னை–18/35.
மாநில கணக்காயர், சென்னை–18/35 (பெயரில்)

**நகல்:**
நிதி(சந/வ.செ..பொ–II)த்துறை, சென்னை–9.
இ.கோ./உ.ந.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.